**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Characterization of the Hero in Mullaippaattu and Kurinchippaattu

**K. Priya[1*], Dr. R. Madhankumar[2],**

[1]*Ph.D. Research Scholar,* Department of Languages - Tamil Division, Karpagam Academy of Higher Education, Coimbatore-21.

[2]*Research Supervisor*, Associate Professor and Coordinator, Department of Languages - Tamil Division, Karpagam Academy of Higher Education, Coimbatore-21.

[*]Correspondence: kpiyamaphd@gmail.com

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** The relationship between literary characters and the narrative is considered vital. Every action and spoken word of a character carries weight. In Mullaippaattu and Kurinchippaattu, the character of the 'Hero' is excellently designed. Both works offer ample scope to independently analyze the Hero's nature, including his introduction, speech, physical descriptions, and deeds.

By internalizing the traditions of Akathinai (the interior landscape of love), the Hero and Heroine are integrated through specific events. Characters construct the sequence of these events; narratives are built by giving the characters a voice and organized through their actions. This article seeks to examine the specific character molds and traits of the Hero as depicted in Mullaippaattu and Kurinchippaattu..

**Keywords:** Characterization, Character Molding, Hero (Thalaivan), Character Traits, Kurinchippaattu, Mullaippaattu, Attributes of the Hero, Mediators (Vaayilgal), Sangam Era Man, Sangam Literature.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு - தலைவன் பாத்திர வார்ப்பு

[1]**க.பிரியா,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-21.
[2]**முனைவர் இரா. மதன்குமார்,** ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர், மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-21.

**முன்னுரை**

பத்துப்பாட்டு நூல்களில் முல்லைப்பாட்டும் குறிஞ்சிப்பாட்டும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இரண்டு நூல்களிலும் கதையோட்டம் கொண்ட அமைப்பு சிறப்பாக அமைந்துள்ளது. கதையினைக் கண்டடைய வேண்டுமானால் இவற்றில் இருக்கும் பாத்திர அமைப்பை நுட்பமாகக் கண்டறியவேண்டும். கபிலரும் நப்பூதனாரும் மிகவும் சிறப்பான முறையில் தங்கள் பாடல்களில் மாந்தர்களைக் கட்டமைத்துள்ளனர். மாந்தர்களின் செயல்கள் வாயிலாகவே அனைத்துக் கதை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. கதையின் ஓட்டத்திற்கு ஏற்ப மாந்தர்களின் செயல்களும் ஈடுகொடுத்து இயங்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன. மாந்தர்கள் துல்லியத்தன்மை உடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளதால் வாசகனுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. நேர்க்கோட்டுப் பாணியிலான கதையோட்ட அமைப்பு சிறப்பானதாகக் கையாளப்பட்டுள்ளது. இந்த அமைப்பே பாடலுக்குக் கதையோட்டத்தினை வழங்கிவிடுகிறது. அந்த வகையில் கதை அமைப்பின் வழியாக கதாப்பாத்திரங்களின் முக்கியத்துவத்தையும் நாம் அறியலாம். சங்க காலத்தில் தலைவனின் பாத்திர வார்ப்பானது ஏனைய கதாப்பாத்திரங்களிலிருந்தும் தனித்துவம் வாய்ந்ததாகப் பார்க்க முடிகின்றது. எனவே தலைவன் பாத்திரப்படைப்பு குறித்து விரிவாக ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்களில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் கதையுடன் கொள்ளும் உறவு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பாத்திரங்களின் அனைத்துச் செயல்களும் பேச்சும்கூட முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள 'தலைவன்' பாத்திரம் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தலைவனின் இயல்புகளைத் தனித்து ஆராய்வதற்கான வழிவகைகள் இவ்விரு நூல்களிலும் அதிகம் காணப்படுகின்றன. தலைவனின் அறிமுகம், பேச்சு, உடல் சார்ந்த சித்திரிப்புகள், செயல்கள் போன்றவற்றை விரிவாக ஆராயலாம். தலைவன் தலைவி என்று அகத்திணையின் மரபுகளை உள்வாங்கிக் கொண்டு நிகழ்ச்சிகளால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியின் கோர்வையைப் பாத்திரங்கள் கட்டமைக்கின்றன. பாத்திரங்களைப் பேசவைப்பதன் வழியாக நிகழ்ச்சிகள்

அமைக்கப்பட்டுள்ளன. பாத்திரங்களின்செயல்கள் மூலமாகவும் நிகழ்ச்சிகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைப்பாட்டு மற்றும் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள தலைவனின் பாத்திர வார்ப்புகளை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

பாத்திரப்படைப்பு, பாத்திர வார்ப்பு, தலைவன், குணநலன்கள், குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, தலைவனின் பண்புகள், வாயில்கள், சங்க கால ஆண், சங்கஇலக்கியம்.

**குறிஞ்சிப்பாட்டுத் தலைவனின் அறிமுகம்**

தலைவியைப் பிரியாமல் இருக்கும் தோழி, செவிலித்தாயிடம் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஏற்பட்ட காதல் உறவு பற்றிக் கூறுவதாக அமைந்த பகுதியில் தலைவன் குறித்த அறிமுகக் காட்சி இடம்பெற்றுள்ளது.தோழியானவள் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் எவ்வாறு சந்திக்கிறார்கள் என விளக்கமாக விவரிக்கின்றாள். மிகத் திறமையுடன் அவள் அதை விவரித்துத் தலைவனிடம் வரைவு வேண்டுகிறாள். தலைவியின் மேனியில் அணிந்த சிறப்பான அணிகலன்களை நெகிழச் செய்த, அழிக்க முடியாத கொடூர நோயைக் கண்டு செவிலித்தாய் கலங்கி வருந்துகிறாள். இதனைக் கண்ட தோழியானவள் தலைவிக்கு ஏற்பட்ட துன்பத்தை விளக்கி உரைக்கும்போது தலைவனின் அறிமுகத்தையும் நிகழ்த்திவிடுகிறாள். தலைவனுடைய தோற்றப்பொலிவை விளக்கிச் சொல்கிறாள். தலைவனின் உடலில் அணிந்திருக்கும் அணிகலன்களையும் அவனது ஒப்பனைகளையும் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

**“எண்ணெய் நீவிய சுரி வளர் நறும் காழ்**
**தண் நறும் நகரம் கமழ மண்ணி**
**ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா**
**காழ் அகில் அம் புகை கொளீஇ”** (குறிஞ்சிபாட்டு, 107-110)

என்ற குறிஞ்சிப்பாட்டு வரிகளில், தலைவன் தன்னுடைய எண்ணெய் தடவிய, சுருண்டு வளர்ந்த, நீலமணியின் நிறத்தைக் கொண்ட பெரிய கருமையான மயிரின்கண், குளிர்ந்த நறுமணத்தை உடைய மயிர்ச் சாந்தின் மணம் கமழப் பூசி, ஈரம் உலர விரலால் கோதி, முடிந்துவைத்த பிணைப்பை அவிழ்த்து, யாழ் இசையைப் போன்று அழகுறப்பாடும் தேனீக்கள் மிகுந்த அந்த மணத்தை விரும்பி ஆரவாரிக்குமாறு, வைரம் பாய்ந்த அகிலின் அழகிய புகையை ஊட்டியிருந்தான் என்று தோழி குறிப்பிடுகிறாள். மேலும்,

**“மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்**
**வண்ண வண்ணத்த மலர் ஆய்வு விரைஇய**
**தண் நரும் தொடையல் வெண்போழ்க் கண்ணி**
**நலம் பெறும் சென்னி நாம் உற மிலைச்சி” 2 (**குறிஞ்சிபாட்டு, 113-116)

என்ற அடிகளின் வழி “மலையிலிருந்தும், நிலத்திலிருந்தும், மரத்தின் கிளைகளிலிருந்தும், சுனையிலிருந்தும் கிடைக்கப்பெற்ற பல நிறங்களில் மலர்களைத் தேர்ந்து தொடுத்த, குளிர்ச்சியுடைய நறுமணமான மலர் மாலையையும், தாழை மடலினாலும் கட்டப்பட்ட மாலையைத் தன் தலையில் அணிந்திருந்தான். அத்தகைய கோலத்தில் அவனைக் கண்டோர் குறிஞ்சி நிலத்தலைவன் முருகன் என அச்சம் உண்டாகுமாறு அவன் தோற்றமளித்தான்”. என்று தலைவனின் தோற்றத்தைத் தோழி விளக்கி கூறுகிறாள். இவ்வாறாக குறிஞ்சிப்பாட்டில் தலைவனின் தோற்றமானது அனைவருக்கும் தெளிவாகப் புலப்படுமாறு அமைக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

**முல்லைப்பாட்டில் தலைவன் அறிமுகம்**

போரின் நிமித்தம் பிரிந்து சென்ற தலைவன், சொல்லிச் சென்ற காலத்தில் திரும்பி வராமல் இருத்தலை எண்ணி மிகவும் வருந்தும் தலைவியைப் பார்த்துச் செவிலித்தாய் “வருந்தாதே உன் தலைவன் விரைவில் வந்துவிடுவான்” என்று ஆறுதல் கூறுமிடத்து தலைவனின் அறிமுகம் நிகழ்ந்து விடுகிறது. “மிகவும் நல்ல சொற்களை நாங்கள் கேட்டோம். பகைவர்களின் நிலத்தைக் கவர்ந்து கொண்டு, அவர்களின் செல்வத்தைப் பெற்று, போர்த் தொழில் முடித்து வருவான் உன் கணவன். இது உண்மை உன் மனத் தடுமாற்றத்தால் ஏற்பட்ட வருத்தத்தை நீக்குவாயாக, கருமை நிறமுடையவளே!” என்று செவிலித்தாய் கூறுமிடத்து தலைவனின் நிலை முழுவதுமாக வெளிப்பட்டுவிடுகின்றது.

**“நன்னர் நன் மொழி கேட்டனம் அதனால்**
**நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்**
**முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து**
**வருதல் தலைவர் வாய்வது நீநின்**
**பருவரல் எவ்வம் களை மாயோய் எனக்**
**காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து**
**பூ போல் உண்கண் புலம்பு முத்து உறைப்ப” 3 (**முல்லைப்பாட்டு, 17-23)

இந்தச் செய்யுளைப் படிக்கும் வாசகன், தலைவன் போரின் நிமிர்த்தமாகத் தலைவியைப் பிரிந்து சென்றிருக்கிறான் என்பதை எளிதில் அறிந்துகொள்வான். செவிலியின் கூற்றில் கதைத்தன்மை இருப்பதால் இந்த இடம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. செவிலித்தாயின் கூற்று வாயிலாகவும் தலைவனின் பாத்திர அறிமுகம் வெற்றிகரமாக நிகழ்ந்துவிடுகிறது. தலைவனின் நிலை குறித்து வாசகன் முழுமையான சித்திரத்தை மனத்தில் உருவாக்கி விடுகிறான். மேலும் தலைவன் தலைவியுடன் இல்லை என்பதையும் நாட்டிற்காக உழைக்கும் பொருட்டு போர்க்களத்தில் இருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ளும்படியாகவும் முல்லைப்பாட்டின் பாடலடிகள் அமைந்துள்ளன.

**தலைவனின் செயல்**

போர்க்களத்திற்குச் சென்ற தலைவன் உறக்கமின்றித் தவிக்கும் காட்சியை நப்பூதனார் தெளிவாகக் காட்சிப்படுத்தியுள்ளார். “மன்னன் போரினை விரும்புவதால், உறக்கம் இல்லாமல், பலவற்றையும் எண்ணினான். பகைவர்கள் எடுத்து எறிந்த வேல் பாய்ந்ததால் பெண் யானைகளை மறந்த, தன் ஆண் யானைகளைப் பற்றி எண்ணினான். யானைகளின் பருத்த தும்பிக்கைகள் வெட்டப்பட்டுப் பாம்பு துடித்தாற்போல் விழுந்த போரில், தேன் பாயும் வஞ்சி மலைக்கு நல்ல வெற்றியை உண்டாக்கி செஞ்சோற்றுக் கடனுக்காக அழிந்த தன் மறவர்களை எண்ணினான். உடம்புக்குக் காவலாக இட்ட தோல் பரிசை அறுத்துக் கொண்டு கூரிய நுனியுடைய அம்புகள் துளைத்ததாலே தங்கள் செவியைச் சாய்த்துக் கொண்டு புல் உண்ணாமல் வருந்தும் தன் குதிரைகளைப் பற்றி நினைத்தான். ஒரு கையைப் படுக்கையின் மீது வைத்து, ஒரு கையைத் தலையுடன் கடகம் சேரும்படி வைத்து, நீண்ட நேரம் நினைத்தான்.” அதாவது தலைவன் எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் தன்னுடைய கடமையை மறக்கவில்லை மேலும் போர்க்களத்தில் இருப்பதால் வேறு எந்தவிதமான சிந்தனைகளுக்கும் இடம் கொடுக்கவில்லை.

**“தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்**
**சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு**
**வை நுனை பகழி மூழ்கலின் செவி சாய்த்து**
**உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்**
**ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு கை**
**முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து”4 (**முல்லைப்பாட்டு, 71-76)

என்னும் அடிகளில், தான் பகைவருடன் மேற்கொண்ட போரில் வெற்றியடைந்தால் மட்டுமே தன்னுடைய நாட்டைக் காப்பாற்றமுடியும். தன் நாட்டு மக்களைப் பகை அரசர்களிடமிருந்தும் காப்பாற்றமுடியும். ஆகையால் போர் குறித்த சிந்தனையில் மட்டுமே மூழ்கி இருக்கிறான். இந்தத் தலைவனின் படைப்பை 'வகைமாதிரி' பாத்திரமாக முல்லைப்பாட்டில் புலவர் கட்டமைத்துள்ளார்.

**தலைவனின் வீரம்**

போர் மேற்கொண்ட தலைவன் மாபெரும் வெற்றியை அடைந்தான். தன்னுடைய சேனைக்கு ஒரு சில பாதிப்பு, இழப்பு ஏற்பட்டாலும் வெற்றிவாகை சூடினான். வெற்றிக்குப் பின் பாசறையில் தலைவன் நிம்மதியாக இருந்தான். வெற்றிக் களிப்பினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான். தன் உடனிருந்தவர்களையும் போற்றி ஆரவாரம் செய்தான். தன்னுடைய தலைமையை ஏற்றுத் தனக்கு வெற்றியைத் தேடித்தந்த வீரர்களை முழுமையாக நம்பினான்.

வெற்றியடைவதற்கு முதல்நாள் தூக்கமின்றித் துன்புற்றாலும், அடுத்த நாள் கிடைக்கவிருக்கும் வெற்றி குறித்தே மகிழ்ந்திருந்தான். பகைவரை நோக்கிக் குறி வைத்து வீச, வாள் ஏந்திய கையினாலே, வெற்றி தரும் வஞ்சி மாலையை அழகுபடுத்தி அணிந்து கொண்டு, பகையரசர்

கேட்டு நடுங்க வெற்றி முரசொலிக்கப் படை வீட்டிலே போரில் பெறவிருக்கும் வெற்றியை மனத்தில் நினைத்தபடி மகிழ்ச்சியில் இனிமையுடன் துயில் கொண்டான்.

தலைவன் ஒரு பக்கம் இப்படி இங்கே போரின் கொடுமைகளை எண்ணி வருத்தத்தில் கண் விழித்தாலும், மறுபக்கம் கிடைக்கும் வெற்றியை எண்ணிக் களிப்புடன் கண் அயர்ந்தான். புலவர் தலைவனின் நிலையை மிகவும் உன்னதமானதாகக் காட்டுவதில் முழுமையான வெற்றியை அடைந்துள்ளார். ஒரு தலைவனை எப்பொழுதுமே உயர்ந்த செயல்கள் கொண்டவனாகக் காட்டவேண்டும்.

பகை மன்னர்களுடன் செய்தபோரில் வெற்றியடைந்து, பகை அரசர்களால் மிகவும் விரும்பப்பட்ட நிலங்களைக் கவர்ந்து, தன்னுடைய பெரும் படையுடன், வெற்றியால் உயர்த்தப்படும் வெற்றிக்கொடியை ஏற்றி, வெற்றிக்குப் பொருந்த ஊது கொம்பும், சங்கும் முழங்க வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தான். அரசனையும் அவன் சேனைகளையும் அனைவரும் வரவேற்று ஆவலுடன் கண்டுகளித்தனர். இங்கு அரசன் தலைவனுக்குரிய அனைத்துக் குணங்களும் கொண்டவனாகத் திகழ்கிறான்.

**தலைவனைத் தலைவி முதலில் சந்தித்தல்**

தலைவி குறிஞ்சி நிலத்தில் தினைப்புனக் காவல் மேற்கொண்டிருந்தாள். தோழிகளுடன் இன்புற்று விளையாட்டாகக் காவல் பணியை மேற்கொண்டொழுகினாள். இந்தச் சூழலில் தலைவனைத் தலைவி சந்திக்கிறாள். ஒரு திரைப்படக் காட்சி போல புலவர் இதனை அமைத்துள்ளார். தலைவன் வேட்டையின் நிமித்தமாகக் குறிஞ்சி மலையில் சுற்றித்திரிகிறான். வேட்டை நாய்கள் அடங்கிய குழுவினருடன் தானும் ஒருவனாகத் தலைமைப் பொறுப்பேற்று மலைக்காடுகளில் சுற்றிவருகிறான். இந்த இடத்தைத் தலைவியின் கூற்றாக அமைத்து தலைவனின் செயலைப் புலவர் காட்சிப்படுத்துகிறார். "பகைப் புலத்தைப் பாழ்படுத்தும், நெருங்க முடியாத வலிமையுடன், பகைவர்கள் புறமுதுகிட்டு ஓடுவதைக் கண்ட பல வேற்படையை உடைய இளைய மறவர்களைப் போன்று மிகுந்த சினத்தால் செருக்குற்று, நெருங்கும் தோறும் சினக்கும், மூங்கில் முளையைப் போன்ற ஒலி உடைய பற்களையும் கூர்மையான நகங்களையும் உடைய தலைவனுடைய நாய்கள், இமைக்காத கண்களுடன் எங்களைச் சுற்றிவளைத்து நெருங்க, நாங்கள் நடுங்கினோம்" என்று தலைவி கூறுகிறாள். தலைவனின் வேட்டை நாய்கள் தினைப்புனம் காவல் செய்யும் பெண்கள் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்தன. நாய்களின் ஆராவாரத்தைக் கண்ட பெண்கள் மருண்டு நின்றனர். மேலும் அந்த இடத்தை விட்டு அகன்று செல்லவும் முயன்றனர். என்ற காட்சியை அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார். நல்லவாசகனால் அடுத்து நடக்கவிருக்கும் நிகழ்ச்சியை மனத்தில் கற்பனை செய்துவிடமுடியும். மேற்கண்ட செய்தியின் வழி தலைவன் வருகிறான் என்பதை அறியமுடிகின்றது.

**தலைவனின் தோற்றமும் வருகையும்**

தினைப்புனம் காக்கச் சென்ற தலைவியைத் தலைவன் சந்திக்கிறான். இந்தச் சந்திப்பு குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதியில் நடைபெறுகிறது. தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொண்ட செய்தியைத் தோழியானவள் செவிலித்தாய்க்கு விளக்கிக் கூறுகிறார். இந்த இடத்தில் தலைவனின் அறிமுகமும் வருகையும் நிகழ்கிறது. அதாவது கதை ஓட்டத்துடன் தலைவன் இணைக்கப்படுகின்றான். “பச்சைக் காம்பையுடைய பிச்சி மலரின் அழகிய இதழ்களால் அழகாகத் தொடுத்த ஒரு மாலையைத் தலைமயிரில் சுற்றி, சிவப்பு நெருப்பைப் போன்ற ஒளியுடைய பிண்டிப் பூக்களை அழகிய தளிருடன் ஒரு காதில் செருகி, அத்தளிர் அவனுடைய திரண்ட தோளில் அலைப்ப, சாந்தைத் தடவிய வலிமை கொண்ட அகன்ற உயர்ந்த மார்பில் தொன்றுதொட்டு அணியும் மரபாகிய நறுமணமான மாலையை அணிகலன்களுடன் பொலிய அணிந்து, சிவப்புப் பொறிகள் பொருந்திய பெரிய முன்னங்கையை உடைய பெரிய கைகளில், நிறமுடைய விரித்தி கட்டப்பட்ட வில்லை ஏந்தி, அம்பை ஆராய்ந்து பிடித்து, நுண்ணியதாகச் செய்த ஆடையினை அசையாதபடிக் கட்டி, இயல்பாக அழகாகப் பொலிந்த பொன்னால் ஆன உயர்ந்த வீரக்கழல்கள் அவன் திருத்தமாக அடியெடுத்து நடக்கும் பொழுதெல்லாம் உயர்ந்தும் தாழ்ந்தும் அசைய அவன் வந்தான்.” என்ற செய்தியை ,

**“மைந்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து அகலத்து**
**தொன்றுபடு நறும் தார் பூணொடு பொலிய**
**செம் பொறிக்கு ஏற்ற வீங்கு இறை தட கையின்**
**வண்ண வரி வில் ஏந்தி அம்பு தெரிந்து**
**நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி**
**இயல் அணி பொலிந்த ஈகை வான் கழல்” 5 (**குறிஞ்சிபாட்டு, 121-126)

என்ற குறிப்பாட்டு அடிகள் புலப்படுத்துகின்றன. தலைவனின் வருகையைக் கூறும் தோழி மிகுந்த கலை நுணுக்கத்துடன் வெளிப்படுகிறாள். தலைவனின் நடை, உடை பாவனைகளைக் கூட நுட்பமான முறையில் விளக்கிக் கூறுகிறாள். தலைவன் எப்பொழுதுமே தன்னிகரியில்லாதவனாக இருக்க வேண்டும். நூறு நபர்கள் இருக்கும் இடத்தில் அனைவரது கவனமும் யார் மீது படுகிறதோ அவனே மிகவும் சிறந்த தோற்றப்பொழிவு கொண்டவனாகக் கருதப்படுகின்றான். அனைவரையும் கவரும் தோற்றம் கொண்டவனையே தலைவனாக அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். அந்த வகையில் குறிஞ்சிப்பாட்டில் வரும் தலைவன் மிகவும் சிறப்புடையவனாகக் கருதப்படுகின்றான். தலைவனின் அறிமுகமும் சிறப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தலைவனின் பேச்சு**

வேட்டை நாய்களைத் தேடி வந்த தலைவன் தலைவியைச் சந்திக்கிறான். தலைவியை மட்டுமல்லாமல் தோழியர்களின் குழுவினையும் சந்திக்கிறான். இந்த இடத்தில் தலைவியின் கூற்று நிகழ்வதாகப் புலவர் பாட்டினை அமைத்துள்ளார்.

**“மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து**
**ஆ காண் விடையின் அணி பெற வந்து எம்**
**அலமரல் ஆயிடை வெரூஉதல் அஞ்சி**
**மெல்லிய இனிய மேவர கிளந்து எம்**
**ஐம்பால் ஆய் கவின் ஏத்தி ஒண் தொடி**
**அசை மென் சாயல் அம் வாங்கு உந்தி**
**மட மதர் மழை கண் இளையீர்! இறந்த**
**கெடுதியும் உடையேன் என்றனன்" 6** குறிஞ்சிபாட்டு, 135-142

என்னும் வரிகளில் 'தனக்குப் பகையாகிய பிற காளைகளை விரட்டிய, செருக்கு மிக்க, வேறு நிலத்துப் பசுக்களைக் கண்ட காளையைப் போல, அழகுடன் வந்து, நாங்கள் மனக்கலக்கம் அடைந்த வேளையில், நாங்கள் அஞ்சுவதைக் கண்டு தானும் அஞ்சி, எங்களிடம் மென்மையான இனிமையான சொற்களைப் பொருந்துமாறு கூறி, எங்களுடைய ஐந்து பிரிவாகிய கூந்தலையும், எங்களின் பலரால் ஆராயப்பட்ட அழகையும் புகழ்ந்து, அதன் பின், “ஒளியுடைய வளையல்களையும், அசையும் மென்மையான சாயலையும், அழகிய வளைந்த கொப்பூழினையும், மடைமையுடைய அழகான ஈரக் கண்களையுமுடைய இளையவர்களே நான் வேட்டையாடிய விலங்கு தப்பிப்போன நிலையில் உள்ளேன்” என்றான். தலைவனின் நிலையையும் தலைவன் என்ன கூறினான் என்பதையும் தோழியின் கூற்று வாயிலாகத் தெளிவாக அறியமுடிகின்றது.

தலைவியிடம் தான் என்ன நோக்கத்திற்காக வந்தேன் என்பதையும் தலைவன் கூறிவிடுகின்றான். வேட்டையாடிக் கொண்டிருந்தேன். வேட்டை நாய்கள் என்னுடைய செயலுக்குத் துணைப்புரிந்து வந்தன. நான் வேட்டையாடிய விலங்கு ஒன்று தப்பிவிட்டது. அதனை நாய்களைக் கொண்டு விரட்டினேன். என்னுடைய நாய்களைப் பின்தொடர்ந்து ஓடி வந்தேன். உங்களைப் பார்க்கும் வாய்ப்பும் கிட்டியது என்பதனை மனத்தில் நினைத்துக் கொண்டான். தலைவியின் அழகில் மயங்கியும் நின்றான். கண்டதும் காதல் என்பதன் அடிப்படையில் காதல் வசப்பட்டும் தலைவி மேல் மையல் கொண்டும் நின்றான். தலைவிக்கும் தலைவனின் தோற்றம் பிடித்துவிடுகின்றது. அவளும் தலைவன் மீது காதல் கொள்கிறாள், என்ற செய்தியை எடுத்தியம்பும் பாடலடிகளை குறிஞ்சிப்பாட்டு சுட்டிக்காட்டுகின்றது.

**குறிஞ்சிப்பாட்டுத் தலைவனின் செயல்**

தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பு காரணமாகத் தினைப்புனத்தில் நிற்பதை விரும்புகின்றான். மேலும் தலைவியுடன் பேசுவதற்கும் விரும்புகின்றான். ஆனால் தலைவி புதிய நபருடன் பேசுவதைத் தவிர்க்கிறாள். ஒருவேளை அவளது மனத்தில் ஆசை இருப்பினும் தோழியர்கள் புடைசூழ நிற்பதால் பேசுவதற்குத் தயங்குவதாகக் கருதுவதற்கும் இடமிருக்கிறது. இந்த இடத்தில் தலைவனின் செயலைச் சித்திரமாகப் புலவர் தீட்டிவிடுகிறார். தலைவனின் கேள்விக்குத்

தலைவி பதில் கூறவில்லை. தலைவி மட்டுமல்ல; அவளுடன் இருக்கும் தோழிகளும் பேசவில்லை. இதனைத் தலைவியே கூறுகின்றாள்.

நாங்கள் அதற்குப் பதில் கூறவில்லை. அதனால் அவன் வருந்தி, கலங்கி, "என்னிடமிருந்து தப்பிய விலங்கை நீங்கள் காட்டாவிட்டாலும் பரவாயில்லை. என்னுடன் பேசுவது உங்களுக்குப் பிழையாகுமா, மென்மையானவர்களே?" என்று வினவுகிறான். நட்ட ராகம் முற்றுப் பெற்ற பாலை யாழில் வல்லவன் தன் கையினால் தெறித்த நரம்பைப் போல இம்மென்று இசைக்கும், காதலுடைய பெண் வண்டுகளுடன் ஆண் வண்டுகள் விரும்பி வந்து தங்கும் பூந்தாது உடைய மலர்கள் மலர்ந்த தழைத்து விரிந்த ஒரு மரக்கிளையை ஒடித்து, பாகனின் பரிக்கோலை மீறிய களிற்று யானையைப் போல், அக்கிளையை வெற்றியுண்டாக வீசி, ஓசையுண்டாகக் குரைக்கும் தன்னைச் சுற்றியுள்ள வேட்டை நாய்களின் கடுமையான குரைத்தலை அடக்கி, எங்கள் விடைக்காகக் காத்து நின்றான். என்று தலைவனின் செயலை,

**"கை கவர் நரம்பின் இம்மென இமிரும்**
**மாதர் வண்டொடு சுரும்பு நயந்து இறுத்த**
**தாது அவிழ் அலரி தா சினை பிளந்து**
**தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி**
**கல்லென் சுற்ற கடுங்குரல் அவித்து எம்**
**சொல்லற் பாணி நின்றனன் ஆக"7** குறிஞ்சிபாட்டு, 147-152

என்ற பாடலடிகளில் தலைவி எடுத்துரைக்கின்றாள். தலைவி பேசவில்லை என்பதால் தலைவன் துன்பமும் அடைகிறான். இந்தச் சூழலில் நாய்களின் குரைப்புச் சத்தம் அவனை எரிச்சல் ஊட்டியிருக்கக்கூடும். அதனால் நாய்களின் மீது அவனது கவனம் திரும்பி விடுகின்றது. நாய்களின் பக்கமாக மரக்கிளையை வீசி அவற்றின் குரைத்தலை அடக்குகின்றான் என்பதையும் இங்கு உணரமுடிகின்றது.

**தலைவன் தலைவியைப் பேணுதல்**

தலைவியைக்கூடிய தலைவன் அவளைப் பாதுகாப்பான இடத்தில் கொண்டுவந்து சேர்த்தான். எந்த ஆபத்துமின்றி அவளைப் பாதுகாப்பாகக் கூட்டிவந்தான். மேலும் அவளை அழைத்துவரும் பொழுது உன்னைத் திருமணம் செய்துகொள்வேன் என்று உறுதியளித்தான். "நுண்ணிய மூட்டுவாய் உடைய முன்கையைப் பற்றி, உன்னை உன் உறவினர் எனக்குத்தர, நாடறியும் நல்ல மணத்தினை நான் நடத்துவேன் இன்னும் சில நாட்களில்! கலங்கு தலைப்பாதுகாப்பீர்களாக, விளங்குகின்ற அணிகலன்களை அணிந்தவர்களே!" என்று நல்ல சொற்களைத் தலைவியின் துன்பம் தீருமாறுக் கூறி, பசுவைப் புணர்ந்த ஏறுபோல, எங்களுடன் வந்து, முழவின் ஓசை நிற்காத பழைய நம்மூரின் வாயிலில் பலரும் நீரை உண்ணும் துறையில்

எங்களை நிறுத்திவிட்டுச் சென்றான் என்று தலைவி தலைவன் குறித்து பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறாள்.

**“நேர் இறை முன்கை பற்றி நுமர் தர**
**நாடு அறி நன் மணம் அயர்கம் சில் நாள்**
**கலங்கல் ஓம்பு மின் இலங்கு இழையீர் என**
**ஈர நல் மொழி தீர கூறி**
**துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து**
**துஞ்சா முழவின் மூதூர் வாயில்**
**உண் துறை நிறுத்து பெயர்ந்தனன்” 8** குறிஞ்சிபாட்டு, 231-237)

தலைவியின் இத்தைகைய கூற்றிலிருந்து பார்க்கும் போது தலைவனின் தூய்மையான உள்ளம் நன்றாக வெளிப்படுகிறது. தலைவன் மிகவும் நேர்மையாக நடந்து கொள்கிறான். தலைவியிடம் இன்பம் துய்த்தவுடன் விட்டுவிட்டு ஓடிவிடாமல் கடைசிவரை அவளுடன் வாழவேண்டும் என்று நினைக்கின்றான். தோழிகளுடன் இணக்கமாகப்பேசி அவர்களையும் மகிழ்விக்கிறான். அவர்களையும் பத்திரமாக அழைத்துவந்து பாதுகாவல் மிக்க இடத்தில் சேர்க்கிறான். தலைவியை மணம்செய்து கொள்வேன் என்ற உறுதிமொழியையும் வழங்கிச்செல்கிறான். என்பதையும் நாம் உணரமுடிகின்றது.

**தலைவியைக் காணவரும் தலைவன்**

தலைவியைப் பிரிந்துசென்ற தலைவன் அவள் நினைவாகவே இருந்தான். அவளை மீண்டும் சந்திப்பதற்காக அடிக்கடி குறியிடத்திற்கு வந்தான். “அப்புணர்ச்சி தொடங்கி, முதல்நாளில் கொண்ட விருப்பத்துடன் என்றும் இரவில் வரும் தன்மையுடையவன். அவ்வாறு தலைவன் வரும்பொழுதெல்லாம், காவலர் விரைந்து காவல்காப்பினும், சினம் மிகுந்த நாய்கள் குரைத்தாலும், தூக்கத்திலிருந்து நீ விழித்தாலும், நிலா ஒளியைப் பரப்பினும், தலைவியைக் காணாது அவளது மூங்கில் போன்ற மென்மையான தோளில் இனியதுயிலை அவன் பெறாவிட்டாலும், குறி இல்லாததைத் தலைவன் செய்தக் குறியாகக் கருதிச்சென்று மீண்டும் மனையில் புகுந்தாலும் வெறுத்தலைச் செய்யான். அவன் இளமையைக் கடந்தவன் இல்லை. தன் செல்வத்தின் செருக்கால், நல்லகுடியில் பிறந்த தனக்குரிய நல்ல செயல்களிலிருந்து விலகியவனும் இல்லை” என்று தலைவனின் நிலையைப் படம் பிடித்துக்காட்டுவதை குறிப்பாட்டில் காணலாம்.

**“அன்றை அன்ன விருப்பொடு என்றும்**
**இர வரல் மாலையனே வரு தோறும்**
**காவலர் கடுகினும் கத நாய் குரைப்பினும்**
**நீ துயில் எழினும் நிலவு வெளிப்படினும்**
**வேய் புரை மென்தோள் இன்துயில் என்றும்**
**பெறாஅன் பெயரினும் முனியல் உறாஅன்**
**இளமையின் இகந்தன்றும் இலனே வளமையில்**

**தன் நிலை தீர்ந்தன்றும் இலனே" 9** குறிஞ்சிபாட்டு, 238-245

தொடர்ச்சியாகத் தலைவியைப் பார்ப்பதற்காகத் தலைவன் வருகிறான். எந்த விதமான தடைகள் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்கிறான். மிகவும் பொறுமைசாலியாக இருக்கிறான். எந்தச்சூழலிலும் தலைவியை ஏமாற்றிவிடக்கூடாது என்று நினைக்கிறான். தலைவனின் இத்தகைய பண்பு போற்றுதலுக்குரியதாகும்.

**தலைவனின் காதல்**

தலைவியைக் கண்டவுடன் தலைவனின் மனத்தில் இனம் புரியாத மகிழ்ச்சி தோன்றியது. தலைவியை மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆவலும் பிறந்தது. தலைவியிடம் தைரியமாகப் பேசத்தொடங்கினான். தன்னுடைய மனத்தில் தோன்றிய உணர்ச்சியை மிகவும் வெளிப்படையாகக் கூறினான். இந்த நிகழ்ச்சி தோழியின் கூற்றாக வெளிப்படுகின்றது. 'பெரும் தலைமையுடைய அவன், "அழகிய மென்மையான கூந்தலை உடையவளே! தடுமாறாதே! அச்சம் கொள்ளாதே! உன்னுடைய அழகிய நலத்தை நுகர்வேன் நான். என, பின் நீண்ட நேரமாக நினைத்து, தலைவியின் தோழியான என்னுடைய முகத்தை நோக்கி நகைத்தான்" என்று கூறுகிறாள். தலைவனுக்குத் தலைவி மீது முழுமையான காதல் தோன்றிவிட்டது. அவள் இல்லாமல் தன்னுடைய வாழ்க்கை இல்லையென்னும் முடிவிற்கு வந்துவிடுகிறான். அதனால் தான் என்னவோ தலைவியிடம் பேசும் பொழுது எவ்விதமான தயக்கமுமின்றி வெளிப்படையாக இருக்கிறான். ஒருவேளை தலைவன் அவளை ஏமாற்ற வேண்டும் என்று நினைத்திருந்தால் உடனடியாகப் பேசியிருக்கமாட்டான். மேலும் அவளது ஒளிபொருந்திய நெற்றியைத் தடவிக்கொடுத்தான். அதுவும் தோழியர் உடன் இருக்கும் நிலையிலேயே இதனைச் செய்தான். தலைவனின் காதலிக்குத் தோழியரும் சாட்சியாக இருந்தனர். இதனால் தலைவன் தலைவிமீது கொண்டிருந்த காதலின் உண்மைத் தன்மையும் இங்கு வெளிப்படுகிறது. தலைவனின் செயல்மிகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் அமைந்துவிடுகின்றது. தலைவனின் தனித்தன்மையும் இங்கே சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. தலைவனின் கண்ணியம் இங்கே மிக முக்கியமானதாக கருதத்தக்கதாகும்.

**இல்லறம் பேணுதல்**

தலைவன் தலைவியுடன் சந்தர்ப்ப சூழ்நிலையில் கூடிவிடுகிறான். அவள்மீது அதீத பற்றும் கொண்டுள்ளான். அவளை எக்காரணம் கொண்டும் கைவிட்டுவிடக் கூடாது என்று நினைக்கின்றான். அவளை முறைப்படித் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் ஆவல் கொள்கிறான். இதுவே தலைவனுக்குரிய உன்னதமான குணமாகவும் கருதப்படுகின்றன. "பெரியபானையில் சோறுசமைத்து, வருபவர்களுக்கு எல்லையில்லாமல் உண்ணுவதற்குக் கொடுத்து, செல்வமுடைய இல்லம் பொலியுமாறு அகலத்திறந்த வாசலுடன் பலர் உண்ணுவதற்கு, பசுமையான கொழுப்பு நெய் நிறைந்த சோறு ஆகிவற்றை குற்றமில்லாத

உயர்ந்தகுடியின் சான்றோர் மற்றும் சுற்றத்தாரும் விருந்து உணவாக உண்டு மிஞ்சியதை, உன்னுடன் சேர்ந்து உண்ணுதல் உயர்ந்தது." என்று இல்லறத்தின் சிறப்புகளைக் கூறிப் பெருமைப்படுகின்றான். தலைவனின் பேச்சுவாயிலாக இல்லறத்தின் சிறப்பினையும் புலவர் கூறிவிடுகின்றார். தலைமைப்பாத்திரம் உலக உண்மைகளையும் எடுத்துரைப்பதாக இருக்கவேண்டும். இல்லறத்தின் சிறப்பைத் தலைவனைக் கொண்டே புலவர் பேசவைத்துள்ளார். தலைவனின் பேச்சு இந்த இடத்தில் முக்கியமான இடத்தைப்பெறுகின்றது. தலைவனின் படைப்பு 'வகைமாதிரி' பாத்திரமாக உருவாக்கப்பட்டுள்ளதை உரையாடல்களின் வழி அறியமுடிகின்றது.

**குறிஞ்சி ஒழுக்கம்**

அகத்திணைப் பாடல்களில் திணைக்குரிய உரிப்பொருள் ஏதேனும் ஒரு சூழலில் இயல்பாக வெளிப்பட்டுவிடும். உரிப்பொருள் விளக்கத்திற்கும் தலைவனின் செயலே அடிப்படையாகத் திகழ்கின்றது. குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப்பொருள் 'புணர்தலும் புணர்தல் நிமித்தமும்' என்பது அனைவரும் அறிந்ததே. தலைவன் தலைவியுடன் இணையும் நிகழ்வும் பூடகமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. "அவளை அவன் அணுகிய பொழுது நாணமும் அச்சமும் அவளிடம் தோன்றின. அவளை விரைவாகப்பிரியவும் விடவில்லை. தலைவியை அனைத்து அவளுடன் மார்பு தன்னுடைய மார்பிலே ஒடுங்குமாறு அவளைத் தழுவினான்." என்ற செய்தியால் தலைவனின் செயலையும் அறியமுடிகின்றது. தலைவனின் செயல் வழியாகவே குறிஞ்சி நிலத்தின் உரிப்பொருளும் வெளிப்படுத்தப்படுவதை கண்டறியமுடிகின்றது.

**முடிவுரை**

குறிஞ்சிப்பாட்டு மற்றும் முல்லைப்பாட்டு நூல்களில் தலைவனின் பாத்திரப் படைப்பை 'வகைமாதிரி' பாத்திரமாகப் புலவர்கள் கட்டமைத்துள்ளனர். தலைவனை ஒரு காவியத் தலைவனுக்குரிய பண்பகளோடு எப்பொழுதுமே உயர்ந்த செயல்கள் கொண்டவனாகக் காட்டியிருக்கிறார்கள். தலைவன் மிகவும் நேர்மையாக நடந்துகொள்கிறான். தலைவியிடம் இன்பம் துய்த்தவுடன் விட்டுவிட்டு ஓடிவிடாமல் கடைசிவரை அவளுடன் வாழவேண்டும் என்று நினைக்கின்றான். தன் செல்வத்தின் செருக்கால், நல்ல குடியில் பிறந்த தனக்குரிய நல்ல செயல்களிலிருந்து விலகாமலும் இருக்கிறான். தலைவனின் செயல் மிகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் அமைந்துவிடுகின்றது. தலைவனின் தனித்தன்மையும் இங்கே சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. தலைமைப்பாத்திரமான தலைவனின் பண்புகள் உலக உண்மைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது. இல்லறத்தின் சிறப்பைத் தலைவனைக் கொண்டே புலவர்கள் பேசவைத்துள்ளனர். எனவே குறிஞ்சிப்பாட்டு மற்றும் முல்லைப்பாட்டு நூல்களில் தலைவனின் பாத்திர வைப்பானது சிறந்த தலைமகனுக்குரிய பண்புநலன்களுடன் அமைந்திருப்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.

**பார்வை நூல்கள்**


1. சாமிநாதையர்,உ.வே.(பதி.) , பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், டாக்டர்.உ.வே.சா.நூல்நிலையம், சென்னை,2017.
2. முனைவர் ச.திருஞானசம்பந்தர், தண்டியலங்காரம் தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு, அக்டோபர் 2020.
3. முனைவர் ச.திருஞானசம்பந்தர், தொல்காப்பியம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, மார்ச் 2020.
4. தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப்பதிப்பகம், 2021.
5. அம்மன்கிளி முருகதாஸ், சங்க கவிதையாக்கம் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், சென்னை,2006.
6. அழகப்பன், ஆறு. நாடகச் செல்வம், வானதி பதிப்பகம்,2014.
7. கார்த்திகேசு சிவதம்பி, சங்க இலக்கியக் கவிதையும் கருத்தாக்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2009.
8. செல்வராசு, சிலம்பு.ந.சங்க இலக்கிய மறுவாசிப்பு, காவ்யா பதிப்பகம், சென்னை1993.
9. தனஞ்செயன்.ஆ, ஆற்றுப்படை நூல்கள் காட்டும் அலைகுடிக் கலைஞர்கள் வாழ்வியல், சமூக விஞ்ஞானம் காலாண்டிதழ்,( சனவரி, பிப்ரவரி, மார்ச்) சென்னை, 2015.
10. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம்,2017,சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
11. மணக்குடவர், திருக்குறள் உரை, சர்வதேச தமிழ் ஆய்வு நிறுவனம்,2003.
12. மாதையன், பெ. வரலாற்று நோக்கில் சஙக இலக்கிய பழமரபு கதைகளும் தொன்மங்களும், தமிழ்ப்பல்கலைக்கழகம்,2001.
13. மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., பத்துப்பாட்டு ஆய்வு (புறம்), மு.சண்முகம் பிள்ளை (ப.ஆ), சர்வோதயா இலக்கியப்பண்ணை, மதுரை,1981.
14. வரதராசனார், மு. தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம்,1972.